FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313243

1. District : Coimbatore மாவட்டம் PS: Vigilance and Anti-Corruption காவல்நிலையம் Year: ஆண்டு FIR No.: 15/2026/AC IC B முத.அ. எண் Date: நாள் 28.08.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a), 12 r/w 7(a) and

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7A

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Thursday குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 27.08.2026 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 10.00 hrs Time to : நேரம் வரை 15.30 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.08.2026 Time : நேரம் 14.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol.I Time : நேரம் 28.08.2026 @ 14.30 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer Typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் at about 15 kms, North-East

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி O/o. Sub-Registrar, Sarkar Samakulam, Kovilpalayam Main Road, Coimbatore North.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. T. Sangeetha குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : V. Sakthivel தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Deputy Inspection Call Officer (g) Address : முகவரி O/o. District Inspection Call Officer, Collectorate, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) Tmt. N. Rajeshwari, Sub-Registrar, Sarkar Samakulam, Coimbatore North
(2) Tr. M. Chandru, S/o. Manikandan, Raju Nagar 2nd street, Vannanthurai, Jothipuram Post 35
(3) Tr. S. Chandrakumar, S/o. Sukumaran, No.1 Rudra colony, Thimmarayasamudram, Trichy Dt
(4) Tr. Bhaskaran, S/o. Ayyasamy, 42C/139, Union Bank Road 2nd street, P.N. Palayam, Coimbatore
(5) Tr. Sahaya Paul Sham, S/o. Robert, Advocate, 2/599-3, Durairaj Nagar, NGO colony, CBE
(6) Tr. Arunkumar, S/o. Palanisamy, Puthupalayam, Street, Rathinapuri, Kanuvaipalayam, Coimbatore
(7) Tr. Jayaprakash, S/o. Ramasamy, D.No. 6/88, Pulluvapalayam, Othakalmandapam post, Annur, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted: Before the Hon'ble Principal District and Sessions Judge, Coimbatore.

Separate Sheets enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/08/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

28/08/2026

15. Date & Time of despatch to the court: 28.08.2026 @ 16.30 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. Ezhilarasi,
Rank: நிலை Inspector of Police, Vigilance and Anti-Corruption Coimbatore.
28.08.2026

கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:-

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 15/2026/AC/CB u/s. 7(a), 12 r/w 7(a) and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.8313243 யின் தொடர்ச்சி...

இன்று 28.08.2026-ம் தேதி 14.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.T.சங்கீதா அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 15/2026/AC/CB u/s. 7(a), 12 r/w 7(a) and 7(A) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ஆக 15.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அந்த புகாரின் விவரம் பின்வருமாறு; அனுப்புநர், T.சங்கீதா, துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண்.151/2026/ஐ1, நாள்: 28.08.2026. பொருள்: திடீர் சோதனை - கோயம்புத்தூர் வடக்கு, சர்க்கார் சாமக்குளம் சார்பதிவாளர் அலுவலகம் - திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக. கோயம்புத்தூர் வடக்கு பதிவு மாவட்டம் கோவில்பாளையம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள சர்க்கார்சாமக்குளம், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்வதற்கும், வில்லங்க சான்று பெறுவதற்கும் வருகை தரும் பொதுமக்களிடமிருந்தும், பத்திர எழுத்தர்களிடமிருந்தும் தனிநபர்களான திரு.சந்திரகுமார் மற்றும் திரு.சந்துரு ஆகியோர் மூலமாகவும், நேரடியாகவும் மறைமுகமாகவும் கையூட்டு பணம் பெற்று அதனை அவ்வப்போது செந்தூர் பத்திர எழுத்தர் அலுவலகம் மற்றும் VV பத்திர பதிவு அலுவலகம் ஆகிய பத்திர எழுத்தர் அலுவலகங்களில் கொடுத்து வைத்து பின்னர் வாங்கி கொள்வதாக கிடைத்த நம்பத்தகுந்த

தகவலின் அடிப்படையில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் மற்றும் கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் காவல் குழுவினர் சகிதம் மேற்படி சர்க்கார் சாமக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தை சோதனை செய்வதற்காக, 27.08.2026-ம் தேதி 15.10 மணிக்கு மேற்படி அலுவலகத்தை வந்தடைந்து, அவ்வலுவலத்தின் திறந்திருந்த கிரில் கேட்டின் வழியாக நுழைந்தபோது அதன் பிரதான அறையில் இருந்த அனைத்து இருக்கைகளிலும் மக்கள் அமர்ந்திருந்தனர், மேலும் அவ்வறை முழுவதும் மக்கள் கூட்டத்தில் நிரம்பியிருந்தது. தொடர்ந்து அவ்வலுவலகத்தின் சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்த திருமதி.ராஜேஸ்வரி அவர்களிடம் திடீர் சோதனை குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திய பின் திடீர் சோதனை மேற்கொள்ள வந்திருந்த விபரம் தெரிவிக்கப்பட்டது. அப்போது சார்பதிவாளர், புதுமணத் தம்பதிகளின் திருமணப்பதிவினை மேற்கொண்டிருந்ததால் அப்பதிவு முடியும் வரை திடீர் சோதனை மேற்கொள்ளாமல் காத்திருந்து சுமார் 15.30 மணியளவில் திடீர் சோதனை ஆரம்பிக்கப்பட்டது. சார்பதிவாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்களை விசாரிக்க அவர் கடந்த 05.06.2026 தேதி முதல் அவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தனது கைப்பையிலிருந்த ரூ.2,000/-ஐ (4X200=800, 12X100=1200) எடுத்து ஆஜர் செய்தார். அதனை தொடர்ந்து சார்பதிவாளரது இருக்கைக்கு அருகில் நின்றிருந்த சிலநபர்களில் ஒருவரை விசாரிக்க அவர் தனது பெயர் சந்துரு என்றும், தான் சார்பதிவாளர் அவர்கள் உதவியாக அவர் சொல்லும் வேலைகளை செய்துகொண்டு அவ்வலுவலகத்தில் வேலை செய்து வருவதாகவும், அதற்காக சார்பதிவாளர் வாரம் ரூ.5,000/- சம்பளம் கொடுப்பதாகவும் தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தனது சட்டைப்பாக்கெட்டிலிருந்து மடித்து வைக்கப்பட்டிருந்த நிலையிலிருந்த 500 ரூபாய் நோட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை எண்ணிபார்க்கையில் ரூ.16,500/- (33 X 500 = 16500) இருந்தது. அத்தொகையை குறித்து அவரிடம் கேட்க மேற்படி தொகையில் ரூ.10,000/-ஆனது, களப்பணி மேற்கொள்ள சார்பதிவாளர் அவர்களுக்கு உதவியாக அவ்வலுவலகத்தில்

இருந்த திரு.சந்திரகுமார் என்பவர் தன்னிடம் கொடுத்து வைத்திருக்கும்படி கொடுத்த தொகை எனவும் மீதித்தொகை ரூ.6,500/-ஆனது அன்றையதினம் காலையிலிருந்து அவ்வலுவலகத்திற்கு பத்திரம் பதிவுக்காக வந்தவர்களிடம் சார்பதிவாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்களுக்காக வாங்கிய தொகை என்றும் தெரிவித்தார். மேற்படி தொகை ரூ.16,500/- சார்பதிவாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்களுக்காக பெற்றப்பணம் என்பதால் மேற்படி ரூ.16,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி திரு.சந்துரு, அவரது வலது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.100/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அப்பணம் அவரது சொந்தபணம் என்று சொன்னதால், அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. தொடர்ந்து அவரது இடது பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த 21.08.2026 தேதியிட்ட திரு.சரவணக்குமார், த/பெ.சுப்பையன் என்பவரது பெயரில் இருந்த முன்பதிவு ஒப்புகை சீட்டை பார்வையிட அதன் பின்புறம் பத்திர எழுத்தர்/அலுவலகங்களின் விபரம் மற்றும் சில ஆவணக் குறிப்புகள் எழுதப்பட்டிருந்தது எனவே மேற்படி குறிப்புகள் எழுதப்பட்ட முன்பதிவு ஒப்புகை சீட்டில் திரு.சந்துரு, நான் மற்றும் காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகியோர்களால் கையொப்பம் செய்யப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.சந்துருவை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதனை தொடர்ந்து கையில் ஆவணகோப்புடன் அங்கிருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் பூபாலன் என்றும் தான் பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள அட்வகேட் திருமதி.சீதாலட்சுமி என்பவரது பத்திரம் தயாரிக்கும் அலுவலகத்தில் உதவியாளராக இருப்பதாகவும் அன்றையதினம் தனது அட்வகேட் தயாரித்த பத்திரத்தை பதிவு செய்வதற்காக தனது வாடிக்கையாளர்களுடன் அவ்வலுவலகம் வந்திருந்த விபரத்தை தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்து ரூ.5,330/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அப்பணத்தை குறித்து கேட்க ரூ.5,000/-ம் மேற்படி பத்திர பதிவிற்கான சொத்தினை வாங்குபவர் கொடுத்த தொகை எனவும், ரூ.330/- அவரது சொந்த பணம் என்றும் தெரிவித்தார். மேற்படி சொந்த பணம் ரூ.330/- ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் மேற்படி ரூ.5,000/-த்தை (10

X 500 = 5000) பத்திரம் பதிவு செய்வதற்காக சார்பதிவாளர் அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த லஞ்சப்பணம் எனக்கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.பூபாலனை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதனை தொடர்ந்து கையில் ஆவணத்துடன் அங்கிருந்த மற்றொருவரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.சகாயபேட்ரிக் ஷாம் என்றும், தான் அட்வகேட் என்றும் அவர் தனது வாடிக்கையாளர்களது பெயரில் பத்திரம் பதிவு செய்ய காத்திருக்கும் விபரத்தை தெரிவித்தார். மேலும் திரு.சகாய பேட்ரிக் ஷாம் என்பவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தனது வலது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார் அதனை எண்ணிபார்க்க அதில் ரூ.37,000/- (74 X 500 = 37000) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரை விசாரிக்க அப்பணம் அவர் மேற்கொண்ட பத்திரபதிவிற்காக அவரது வாடிக்கையாளர் கொடுத்த பணம் என்று தெரிவித்தார். இருப்பினும் பணத்துடன் சார்பதிவாளர் அருகே நின்றுகொண்டிருந்ததால் அப்பணம் சார்பதிவாளர் அவர்களுக்கு கொடுப்பதாக வைத்திருந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் எனக்கருதி மேற்படி பணம் ரூ.37,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் நான், திரு.சகாயபேட்ரிக் ஷாமை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தொடர்ந்து சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே இருந்த I.P. கேமரா முன் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தனது பெயர் லதாமணி என்றும் தான் TCS நிறுவனத்தின் மூலம் தகவல் தொகுப்பு பணியாளராக அவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க தன்னிடமிருந்த ரூ.520/- எடுத்து ஆஜர் செய்தார். அது அவரது சொந்தபணம் என்று சொன்னதால் அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து சார்பதிவாளர் இருக்கைக்கு இடது புறமிருந்த தனித்தனி கேபின்களில் அமர்ந்திருந்த அவ்வலவலகத்தின் உதவியாளர்கள் திரு.சரவணக்குமார், திரு.செல்வக்குமார் மற்றும் இளநிலை உதவியாளர் திருமதி.பாரதி ஆகியோர்களை விசாரித்து அவரவர் வைத்திருந்த பணம் குறித்து அவர்கள் கொடுத்த விளக்கங்களின் அடிப்படையில், அவ்வலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் இருப்புப்பதிவேடு

பார்வையிடப்பட்டு அவர்களது பணம் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் முன்னதாக சார்பதிவாளர் திருமதி.ராஜேஸ்வரி ஆஜர் செய்த தொகையான ரூ.2,000/- (4X200=800, 12X100=1200) குறித்து எவ்வித பதிவும் மேற்படி பதிவேட்டில் குறிப்பிடபடாததால், மேற்படி ரூ.2,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து அவ்வலுவலகத்தின் வடகிழக்கு மூலையில் இருந்த அறையில் சீல்வைக்கும் டேபிளின் இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் சந்திரகுமார் என்றும், தான் சார்பதிவாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்களின் அறிவுரைப்படி, அவ்வலுவலகத்தில் பதியப்படும் ஆவணங்களுக்கு சீல்வைக்கும் வேலைகளையும், ஆவணப்பதிவு தொடர்பான இடங்களை களப்பணி மேற்கொள்ள உதவியாக இருந்துவருவதாகவும், சார்பதிவாளர் சொல்லும் வேலைகளை செய்துவருவதாகவும் அதற்காக தனக்கு சார்பதிவாளர் வாரம் ரூ.5,000/- சம்பளமாக கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தான் 27.08.2026-ம் தேதி காலை முதல் பத்திரம் பதிவு செய்யும்போது ஆவண எழுத்தர்களிடம் வசூல் செய்த தொகை ரூ.10,000/-ஐ, தன்னைபோலவே சார்பதிவாளருக்கு உதவியாக இருக்கும் திரு.சந்துரு என்பவரிடம் கொடுத்து வைத்திருப்பதாக தெரிவித்தார். மேலும் திரு.சந்திரகுமாரின் செல்போனிலிருந்த G-PayApp மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த பணப்பரிவர்த்தனைகளை ஆய்வு செய்ததில் பத்திரபதிவு சம்பந்தமாக சிலரிடமிருந்து பணம் பரிவர்த்தனை செய்யப்பட்டிருந்தது. மேலும் இதுகுறித்து நான் திரு.சந்திரகுமாரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதனை தொடர்ந்து பார்வையாளர் காத்திருப்பு அறையில் பொதுமக்களை தவிர கையில் ஆவணங்களுடன் ஆஜரில் இருந்த பத்திர எழுத்தர்/பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வேலை செய்யும் உதவியாளர்களில் திரு.அம்புரோஷ் என்பவர் ஆஜர் செய்த தொகை ரூ.45,500/- குறித்து கேட்க அவர் தான் Gift shop and Money Exchange செய்யும் அலுவலகம் வைத்துள்ளதாகவும், 27.08.2026-ம் தேதி தனது நண்பர் ஒருவரது இடத்தின் Guideline மதிப்பை அறிந்து கொள்வததற்காக அவ்வலுவலகத்திற்கு வந்திருந்த விபரத்தை தெரிவித்தார். அதுகுறித்து

விசாரித்து அவர் வைத்திருந்த தொகை ரூ.45,500/-ஐ அவரது சொந்தபணம் என்பதை உறுதிசெய்தபின் மேற்படிதொகை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. தொடர்ந்து திரு.ஜெயபிரகாஷ் என்பவர் ஆஜர் செய்த பணம் ரூ.10,000/- (20X500=10000) குறித்து விசாரிக்க அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காததால். அப்பணம் சார்பதிவாளர் அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த லஞ்சப்பணம் என கருதி அப்பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதுகுறித்து, நான் திரு.ஜெயபிரகாஷை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தொடர்ந்து அங்கிருந்த திரு.அருண்குமார் ஆஜர் செய்த பணம் ரூ.14,830/-ஐ குறித்து விசாரிக்க அவர் ரூ.830/- தனது போக்குவரத்து செலவிற்காக வைத்திருந்த தனது சொந்தபணம் என்று சொன்னதால் அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த மீதிப்பணம் ரூ.14,000/- (28X500=14000) குறித்து முன்னுக்குபின் முரனாக பதிலளித்ததால் அப்பணம் சார்பதிவாளர் அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த லஞ்சப்பணம் என கருதி அப்பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதுசம்மந்தமாக நான் திரு.அருண்குமாரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் சர்கார் சாமக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தின் சார்பதிவாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்கள், மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் அத்திபாளையம் மெயின் ரோட்டில் இயங்கி வரும் V.V Documentation & Real Estate மற்றும் செந்தூர் Documentation அலுவலகங்களின் மூலம் மாமுல் பணம் வசூல் செய்து வருவதாக கிடைத்த தகவலின் பேரில் மேற்படி அலுவலகத்திற்கு ஏற்கனவே காவலர்களை தனித்தனியாக நியமிக்கப்பட்டு, மேற்படி இரண்டு பத்திர எழுத்தர் அலுவலகங்கள் தொடர் கண்காணிப்பில் இருந்தது. அவ்விரண்டு அலுவலகங்களிலும் ஆய்வுக்குழுவினர் தங்களை அறிமுகம் செய்துகொண்டு அவர்களிடம் திடீர் சோதனையின் விபரம் தெரிவித்து, அவரவர் அலுவலகங்களில் வைத்திருந்த பணம் குறித்து விசாரித்து அவர்கள் கொடுத்த விளக்கங்களை உரியவர்களிடம் பேசி உறுதிசெய்யப்பட்ட பின்னர் அவரவர் ஆஜர் செய்த தொகைகள் அனைத்தும் அவரவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் சர்ககார் சாமக்குளம் சார்பதிவாளர்

அலுவலகத்திலிருந்த அனைத்து இருக்கைகள் மற்றும் பீரோக்கள் ஆகியவற்றை பார்வையிட்டதில் குறிப்பிடும்படி எதுவும் காணப்படவில்லை. மேலும் அவ்வலுவலகத்தின் தனிநபர் இருப்புப்பதிவேடு, வருகைப்பதிவேடு ஆகியவற்றின் உரியபக்கங்கள் நகல் எடுக்கப்பட்டது. மேலும் 27.08.2026 ஆம் தேதிக்கான "A", "B", "C", "D" & "H", "Birth and Death", Sub-Division Account மற்றும் IP Camera CD Account ஆகிய கணக்குகளின் மீதிகட்அவுட்கள் எடுக்கப்பட்டு அவைகளின் அனைத்து நகல்களிலும் சார்பதிவாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவ்வலுவலகத்தில் 15.30 மணிக்கு மேல் Server பிரச்சனையினால் பத்திரபதிவு எதுவும் மேற்கொள்ள இயலவில்லை என்பதை சார்பதிவாளர் அவர்கள் பத்திர பதிவிற்காக காத்திருந்த பொதுமக்களிடம் தெரிவித்து அவர்களை அடுத்தநாள் வரும்படி சொல்லி அனுப்பிவைத்தார். மேற்படி திடீர் சோதனையானது 27.08.2026-ம் தேதி 15.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளையும், அதன் விபரங்களையும் இத்துடன் இணைத்துள்ளேன். அவற்றில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து விவரங்களையும், குறிப்பிட்டுள்ளேன். மேலும் திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் ரூ.84,500/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், திரு.சந்துரு, த/பெ.மணிகண்டன், திரு.பூபாலன், த/பெ.அய்யாசாமி, திரு.சகாய பேட்டரிக் ஷாம், த/பெ.ராபர்ட், திரு.சந்திரக்குமார், த/பெ.சுகுமாரன், திரு.அருண்குமார், த/பெ.பழனிச்சாமி மற்றும் திரு.ஜெயபிரகாஷ், த/பெ.ராமசாமி ஆகியோர்களின் வாக்குமூலங்களையும் இத்துடன் இணைத்துள்ளேன். எனவே மேற்படி திடீர்தணிக்கையின்போது கண்டறியப்பட்ட மேற்சொன்ன முறைகேடுகள் சம்மந்தாக, (1).திருமதி.ராஜேஸ்வரி, சார்பதிவாளர், சர்க்கார்சாமக்குளம், கோயம்புத்தூர் வடக்கு பதிவு மாவட்டம், (2).திரு.சந்துரு, த/பெ.மணிகண்டன், (3).திரு.சந்திரக்குமார், த/பெ.சுகுமாரன், (4). திரு.பூபாலன், த/பெ.அய்யாசாமி, (5).திரு.சகாய பேட்டரிக் ஷாம், த/பெ.ராபர்ட், (6).திரு.அருண்குமார், த/பெ.பழனிச்சாமி மற்றும் (7).திரு.ஜெயபிரகாஷ், த/பெ.ராமசாமி

ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxx) T.சங்கீதா, துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். இணைப்பு:- (1).திடீர் சோதனை நடவடிக்கைகள், (2).கைப்பற்றப்பட்ட பணம் ரூ.84,500/-, (3).கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் (4).பதிவு செய்யப்பட்ட 6 வாக்கு மூலங்கள். Respected Madam, Received the complaint on 28.08.2026 at about 14.30 hrs and registered the case in Coimbatore V&AC Cr.No.15/2026/AC/CB u/s.7(a), 12 r/w 7(a) and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on 28.08.2026 at about 15.00 hrs. (Sd. xxxxxx) R.எழிலரசி, 28/08/2026 Inspr. V&AC, CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் பதிவு செய்யப்பட்ட 6 வாக்கு மூலங்கள் ஆகியவைகளை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

(R.எழிலரசி) 28/08/2026
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.